# திராவிட மாடல் அரசு 19


**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

## 'யூ ஆர் அப்பாயின்டட்..!'




"**அனைவருக்கும் கல்வி. அனைவருக்கும் வேலை. அனைவருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ற வேலை. ஒரு இளைஞருக்கு வேலை கிடைப்பதன் மூலமாக, ஒரு குடும்பம் முன்னேறுகிறது. அது மட்டுமல்ல. அவரது தலைமுறையே முன்னேற்றப் பாதைக்குச் செல்கிறது**" என்று தனியார் நிறுவனங்கள் பங்கேற்ற வேலைவாய்ப்பு முகாம் ஒன்றின் தொடக்க விழாவில் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு கூறினார்.

அது வெறும் உரை மட்டுமே அல்ல. திராவிட மாடல் அரசின் இலக்குகளில் ஒன்று. 2021-ஆம் ஆண்டு மே மாதம் தி.மு.கழக ஆட்சி அமைந்தது முதல், மாநில அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்படும் வேலைவாய்ப்புப் பிரிவின் சார்பில், அனைத்து மாவட்டங்களிலும் தனியார் நிறுவனங்களைக் கொண்டு பெரிய மற்றும் சிறிய வேலைவாய்ப்பு முகாம்களை ஆண்டு முழுவதும் நடத்தி வருகிறது.




### மாநில வளர்ச்சியில் புதிய வளம்

இந்தச் சீரிய முயற்சியின் விளைவாக, 2021-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரை சுமார் 1 லட்சத்து 47 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இவ்வாறு சேர்ந்த புதிய மனிதவளம்தான் சமீபத்தில் வெளியான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக் கழகத்தின் தரவுகளிலும் எதிரொலித்து இருக்கிறது.

**கடந்த 2022 - 2023 நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 14 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியிருப்பதாகக் கூறுகிறது அந்தக் கழகத்தின் அறிக்கை.** அதாவது, அத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. அதுவும் முறைசார்ந்து இயங்குகிற தொழில்களில் இவ்வளவு வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன. குறிப்பாக 18 முதல் 21 வயதுக்கு இடையே உள்ள இளைஞர்கள் சுமார் 3 லட்சத்து 77 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தேசிய அளவில் தமிழ்நாட்டில்தான் இவ்வளவு அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உருவாகியிருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது. நமது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வரும் வேளையில், உற்பத்தி, மின்னணு போன்ற துறைகளில் அதிக அளவு வேலைவாய்ப்புகள் தமிழ்நாட்டில் உருவாகியுள்ளன என்று அந்த அறிக்கை கூறியிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்கிறபோது, நம் திராவிட மாடல் அரசு எவ்வளவு தொலை நோக்குடன் பயணிக்கிறது என்பது புரியும்.

### மாவட்டந்தோறும் முகாம்கள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட, அவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் போன்ற நிகழ்ச்சிகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, அனைத்து மாவட்டங்களிலும் பெரிய அளவிலான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்களை, ஆண்டுக்கு இரண்டு என்ற கணக்கில் நடத்தி வருகிறது. இந்த முகாம்கள் மாவட்ட நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் நடத்தப்படுகின்றன. இவற்றில் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட வேலையளிப்போர் தங்களது மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கலந்துகொள்கின்றனர்.

- 07.05.2021 முதல் மே 2023 வரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் 1,183 சிறு வேலைவாய்ப்பு முகாம்களையும், 101 பெரிய வேலைவாய்ப்பு முகாம்களையும் நடத்தியுள்ளன.
- ஆட்டோமொபைல், வங்கி, நிதி நிறுவனங்கள், உற்பத்தி, கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த 25,880 தனியார்துறை நிறுவனங்கள் இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்றுள்ளன.
- மொத்தம் 7,74,086 வேலைநாடுநர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொண்டதன் விளைவாக, 2,211 மாற்றுத்திறனாளிகள் உட்பட 1,46,468 வேலைநாடுநர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
- இம்முகாம்களின் மூலம் பணி நியமனம் பெற்றவர்களில் ஒரு லட்சமாவது பணி நியமன ஆணையைப் பெற்ற வேலைநாடுநருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.10.2022 அன்று சென்னை புதுக்கல்லூரியில் நடந்த மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் வழங்கினார்.
- மேலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வேலைவாய்ப்புப் பிரிவு மூலம் நடத்தப்படும் இம்முகாம்கள் அனைத்துமே ஓர் இலவச சேவை ஆகும்.
- இம்முகாம்களில் ரூ.10,000/- முதல் ரூ.50,000/- வரை ஊதியம் வழங்கும் காலிப் பணியிடங்களை நிறுவனங்கள் அறிவிக்கின்றன. வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் நாளிலேயே முகாமில் தேர்வு செய்யப்படும் வேலைநாடுநர்களுக்குப் பணியாணைகள் வழங்கப்படுகின்றன.

அதேபோன்று, சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைநாடுபவர்கள் இவற்றில் கலந்து கொண்டு தங்களுக்குத் தகுதியான வேலைகளை ஆராய்ந்து தாங்கள் விரும்பும் பணியினை ஏற்றுக்கொள்கின்றனர். தவிர, பிரதி மாதம் அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இச்சிறிய வேலைவாய்ப்பு முகாம்களில், 10 முதல் 30 வேலையளிப்போரும், 50 முதல் 250 வேலைநாடுநர்களும் கலந்து கொள்கின்றனர். இவ்வேலைவாய்ப்பு முகாம்களில் மாற்றுத் திறனாளிகளுக்கென்று தனியே அரங்கு அமைத்து, அவர்களுக்கு உகந்த வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்கள் வரவழைக்கப்படுகின்றன. மேலும் இவ்வேலைவாய்ப்பு முகாம்களில் தேர்வு பெறாத நபர்களை அவர்களின் திறன் இடைவெளியைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு பெற உதவுகிறது.

### தொடர் கண்காணிப்பு

முகாம்களை நடத்துவது, நிறுவனங்களை வரவழைப்பது, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவது ஆகியவற்றுடன் அரசின் கடமை முடிந்துவிடுவதில்லை. இந்த முகாம்களின் போது பணி நியமனம் வழங்கப்பட்ட வேலைநாடுநர்கள், பணியில் தொடர்ந்து நீடிப்பது குறித்து வேலையளித்த நிறுவனம் மற்றும் பயனர் ஆகிய இருவரையும் தொடர்புகொண்டு உறுதி செய்யப்படுகிறது.

தேர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் மூன்று மற்றும் ஆறு மாதங்களுக்குப் பிறகு, தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றனர். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காகவே தனியார் நிறுவனம் ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

"கையில் பட்டத்துடனும், மனதில் கனவுகளோடும், எதிர்கால வாழ்க்கையை ஏக்கத்தோடும், அதே நேரத்தில் ஊக்கத்துடன் செயல்படும் உற்சாகத்தோடும் நீங்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், உங்கள் கனவுகள் உறுதியாக நிறைவேற்றப்படும். உங்களது ஏக்கங்கள் தீரும். உங்களது திறமைகளுக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்" என்று நம் முதலமைச்சர் வேலைவாய்ப்பு முகாம் நிகழ்வில் கூறினார். அந்த நம்பிக்கையுடன் அடுத்து வரும் முகாம்களில் கலந்துகொண்டு வெல்லுங்கள், பயன்பெறுங்கள், வாழ்த்துகள்.

**...சாதனை தொடரும்**

## ::ப்ளாஷ்பேக்





ஒச்சுபாலு

### பெயர் பெற்ற தொண்டர்!

**ம**துரை கரிமேடு பகுதியில், 1995-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதி தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முத்தமிழறிஞர் கலைஞர், ஆற்காட்டார் ஆகியோர் அக்கூட்டத்துக்கு வருகை புரிந்திருந்தனர். அலைமோதும் கூட்டத்தைப் பார்த்து, எங்களை மிகவும் பாராட்டினார். அதிகளவில் நிதியும் வசூல் செய்து தலைவரிடம் அளித்தோம். அவர் உரையில் "பெரியார் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு, அண்ணா உருவாக்கிய திராவிட அரசியல் சமுதாய இயக்கத்தைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டிய அருங்கடமை, ஒச்சுபாலு போன்ற தொண்டர்களுக்கு இருக்கிறது" என்று என் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியது இன்றைக்கும் மனமகிழ்வை அளிக்கிறது.

**-மா.ஒச்சுபாலு, அவைத் தலைவர், மதுரை மாநகர மாவட்ட தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## விடுதலை - 89



**த**மிழ் நிலத்தை பகுத்தறிவு, சுயமரியாதை, மொழி உணர்வு, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகியவற்றில் மூலம் பண்பட்ட சமூகமாக மாற்ற முரசம் அறிவித்த இதழ்களில் விடுதலையின் பங்கு முக்கியமானது. 1935-ஆம் ஆண்டு ஜூன் 1-ஆம் தேதி நீதிக்கட்சியால் தொடங்கப்பட்ட இந்த இதழ் 88 ஆண்டுகளைக் கடந்து 89-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. 1937-ஆம் ஆண்டில் இருந்து பெரியார் பொறுப்பேற்று விடுதலையை நடத்தத் தொடங்கினார். பேரறிஞர் அண்ணா 1939-ஆம் ஆண்டிலிருந்து 1941-ஆம் ஆண்டு வரை பொறுப்பாசிரியராக இருந்துள்ளார்.

விடுதலை ஏட்டைப் படிப்பவர்களை வேலை நீக்கம் செய்தல், சிறைச்சாலையில் இருப்போருக்கு விடுதலையைத் தொடக்கூடாது என்று தடைபோடுதல், விடுதலை மீது அவதூறு வழக்குகள், வகுப்பு வெறுப்புக் குற்றம், அரச வெறுப்புக் குற்றங்களில் வழக்கு என அந்தக் கால விடுதலை சந்தித்த நெருக்கடிகள் ஏராளம்.


இப்படியான நெருக்கடிகளுக்கு இடையில்தான் 'தமிழ்நாட்டின் கொள்கை வாளாக சுழன்றது விடுதலை'. சுழன்று கொண்டுமிருக்கிறது. வரும், ஜூன் 1-ஆம் தேதி, 89-ஆண்டு தொடக்க விழா கொண்டாட்டங்களுக்கு விடுதலை தயாராகி வருகிறது.

## கருவூலம்

### திருவள்ளுவர் படம்!

**1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்ட மன்றத்தில் திருவள்ளுவர் படம் திறக்கப் பட்டது. அதற்கான கோரிக்கையை 1959-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தி, திருவள்ளுவர் படம் திறக்க வழிவகை செய்தார் கலைஞர். குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், அந்தப் படத்தை சட்டமன்றத்தில் திறந்து வைத்தார். அதற்குக் காரணமாக இருந்த கலைஞர் பெயர்கூட அந்த நிகழ்ச்சியில் உச்சரிக்கப்படவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 132




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131